வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu ——— ඊළනාඩු

விலை ரூ. 30/=




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல. 390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல. 285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    22.06.2026 திங்கட்கிழமை    இதழ் : 167    பக்கங்கள் : 08

# அநுர ஜனாதிபதியானமையால் ஊழல்வாதிகளுக்குத் தலைவலி!

## அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன். 22

1988-1989 காலப்பகுதியில் இடம்பெற்ற கடுமையான அடக்குமுறைகளுக்குப் பின்னர், சோசலிச மாணவர் சங்கத்தின் முதலாவது தேசிய அமைப்பாளராகப் பொறுப்பேற்று, புதிய அரசியல் பயணத்தை வழிநடத்திய தோழர் அநுரகுமார திஸாநாயக்க இன்று நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளதை, அழிந்து வரும் ஊழல்வாதிகளால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்று அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

தேசிய மாணவர் வீரர் தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1988-1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட பாரிய அடக்குமுறைகளுக்கு முகங்கொடுத்து, அதிலிருந்து தப்பிப் பிழைத்து, களனிப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்து, அங்கு சோசலிச மாணவர் சங்கத்தை மீண்டும் கட்டியெழுப்பியவர் தோழர் அநுரகுமார திசாநாயக்க ஆவார்.

அந்த அமைப்பின் முதலாவது தேசிய அமைப்பாளராகச் செயற்பட்ட அவரே இன்று இந்த நாட்டை ஆட்சி செய்யும், உங்களுக்கும் எனக்கும் நம் அனைவருக்கும் தலைமைத்துவம்

07

# "பொதுமன்னிப்பு கிடைத்தால் உண்மைகளைக் கூறுவேன்"!

## சோமரத்னவின் கோரிக்கையை கேள்விக்குட்படுத்திய அமைச்சர்

கொழும்பு, ஜூன். 22

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்‌ஷ, தனக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டால் மேலும் பல உண்மைகளை வெளிப்படுத்தத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் மற்றும் 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சோமரத்ன ராஜபக்‌ஷ வெளியிட்டுள்ள தகவல்கள் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் பிரதான குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு மரண தண்டனை

07

# பருவநிலை மாற்றத்தின் விளைவால் ஆபத்தில் 1.8 பில்லியன் குழந்தைகள்!

## யுனிசெவ் அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 22

பருவநிலை மாற்றத்தின் தீவிர விளைவுகளால் உலகெங்கிலும் உள்ள குழந்தைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதாக யுனிசெவ் வெளியிட்டுள்ள புதிய அறிக்கை எச்சரித்துள்ளது.

உலகளவில் சுமார் 1.8 பில்லியன் குழந்தைகள் வறட்சியினாலும், 1.2 பில்லியன் குழந்தைகள் கடுமையான வெப்ப அலையினாலும் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

662 மில்லியன் குழந்தைகள் வெப்பமண்டல

07

# புதிய வரியால் தேங்காய் ஏற்றுமதி பாதிக்கப்படும்!

## ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 22

தேங்காய் எண்ணெய் இறக்குமதிக்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ள புதிய வரி, இலங்கையின் தேங்காய் ஏற்றுமதித் துறைக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எச்சரித்துள்ளார்.

இந்த வரி காரணமாக இறக்குமதி செலவு கிலோ கிராமொன்றுக்கு 1,250 ரூபா முதல் 1,400 ரூபா வரை உயரக்கூடும் என அவர் தனது 'எக்ஸ்' தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

07

# தரமற்ற நிலக்கரியுடன் வந்த கப்பல் திருப்பி அனுப்பப்பட்டது

கொழும்பு, ஜூன். 22

நாட்டிற்கு அவசர கொள்முதல் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட நிலக்கரி கப்பல்களில் ஒன்று தரமற்ற நிலக்கரியை ஏற்றிவந்ததாக உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சின் செயலாளர் ஜி.எம்.ஆர்.டி. அப்பொன்ஸூ தெரிவித்துள்ளார்.

இந்திய நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து நிலக்கரி கப்பல்களில் ஒரு கப்பல் மட்டுமே திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

07

# நாணய நிதிய பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் இலங்கை வருகை!

கொழும்பு, ஜூன். 22

சர்வதேச நாணய நிதியத்தின் விசேட பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இந்த அதிகாரிகள் குழுவின் பயணம் ஜூன் மாதம் 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை அமையவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் ஈவன் பெபஜோர்ஜியு உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த பயணத்தில் இணையவுள்ளனர்.

இலங்கை தற்போது நடைமுறைப்படுத்தி வரும் பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் அதன் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து ஆராய்வதே இந்த பயணத்தின் முதன்மை நோக்கமாகும்.

(அ)

# எரிபொருள் விலை நிர்ணயத்தை பகிரங்கப்படுத்தவேண்டும் அரசு!

## நாமல் ராஜபக்‌ஷ கோரிக்கை



கொழும்பு, ஜூன். 22

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலைகள் குறைந்து வரும் நிலையில், உள்நாட்டு எரிபொருள் விலைகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன என்பது குறித்த முழுமையான விவரங்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்‌ஷ வலியுறுத்தியுள்ளார்.

பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர்,

# நீதியரசர்கள் வெற்றிடப் பிரச்னை; அரசாங்கத்துக்கு எதிராக தீர்மானம்

## தயாராகின்றன எதிர்க்கட்சிகள்

கொழும்பு, ஜூன். 22

மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் நீதியரசர்களுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாக அரசாங்கத்துக்கு எதிராகத் தீர்க்கமான அரசியல் நகர்வை மேற்கொள்வது குறித்து எதிர்க்கட்சிகள் கலந்துரையாடி வருகின்றன.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து சபாநாயகரிடம் கையளித்த கடிதத்துக்கு, ஜனாதிபதி அல்லது அரசாங்கத் தரப்பிலிருந்து இதுவரை எவ்விதப் பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

07

# கியூ.ஆர். தொடரும்!

கொழும்பு, ஜூன். 22

எரிபொருள் விநியோகத் திற்காகப் பயன்படுத்தப்படும் கியூ.ஆர். குறியீட்டு முறைமை நீக்கப்படமாட்டாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நுகர்வைத் தொடர்ந்து திறம்பட நிர்வகிக்கும்

07

# செம்மணி மனித புதைகுழியில் நேற்றும் புதிதாக 11 எலும்புக்கூடுகள் அடையாளம்!

கொழும்பு, ஜூன். 22

செம்மணி மனிதப் புதைகுழியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அகழ்வுப் பணிகளின் போது நேற்று 7 மனித என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 11 என்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 30ஆவது நாள் அகழ்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

இதன்போதே இந்த என்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், இந்தப் பகுதியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது மொத்தமாக 405 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பஸிலை இலங்கைக்கு கொண்டுவர இன்டர்போலின் உதவி நாடும் அரசு!

## நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களம்

கொழும்பு, ஜூன். 22

முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை இலங்கைக்குக் கொண்டுவந்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்காக, இன்டர்போலின் விசேட உதவியைப் பெற்றுக்கொள்வதற்குக் குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் பொலிஸ் தலைமையகமும் உத்தியோக பூர்வ பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

அவர் நீதிமன்றங்களில் ஆஜராகத் தவறியதைத் தொடர்ந்து, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினாலும் மாத்தறை பிரதம நீதவான் நீதிமன்றத்தினாலும் பிறப்பிக்கப்பட்டுள்ள இரண்டு விசேட பிடியாணை உத்தரவுகளுக்கு அமைவாகவே இந்த சர்வதேச நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துக்குச் சொந்தமான ஏழு தசம் எட்டு மில்லியன் ரூபாய் பொது நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி, ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது 12000 ரி-சேர்ட்டுகளை விநியோகித்த குற்றச்சாட்டின் கீழ் இவரைக் கைது செய்து ஆஜர்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன சி.ஐ.டியின் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவுக்கு அண்மையில் கட்டளையிட்டிருந்தார்.

அத்துடன், மாத்தறை எலியகந்த வீதியில் அமைந்துள்ள ஒன்றரை ஏக்கர் காணியை கொள்முதல் செய்த விவகாரத்தில் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலும் அவருக்கு எதிராக மாத்தறை பிரதம நீதவான் சதுரங்க எரங்க திஸாநாயக்கவினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மருத்துவச் சிகிச்சைகளுக்காக அவர் அமெரிக்காவில் தங்கியிருப்பதாக அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ள போதிலும், நீதிமன்றங்களை அவர் தொடர்ச்சியாகப் புறக்கணித்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, வெளிநாடுகளில் தலைமறைவாக இருக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கொண்டுவரப் பயன்படுத்தப்படும் அதே கடுமையான சர்வதேசச் சட்ட பொறிமுறைகளும், இன்டர்போல் விசேட சிவப்பு அறிவித்தல்களும் அரசியல் தராதரங்களைப் பாராது நீதிமன்றங்களால் தேடப்படும் முன்னாள் அமைச்சர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எதிராகச் சமமாகப் பயன்படுத்தப்படும் எனத் திட்டவட்டமாக எச்சரித்துள்ளார். (அ)

# காணாமற்போனோருக்கு நட்டஈடு உளக் காயங்களை தீர்க்க உதவாது!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 22

"காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இன்னமும் அந்தத் துயரமான துன்பத்தில் இருந்து மீளாத மக்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கு நட்டஈடாக வெறும் பணத்தை வழங்குவதன் மூலமாக இந்த மன உளைச்சலுக்கான தீர்வு ஒரு போதும் கிடைக்காது. பாதிக்கப்பட்ட மக்களின் உளக் காயங்களைத் தீர்க்கக்கூடிய ஒரே மருந்து அன்பு மட்டுமே."

இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான உயர்மட்டக் குழுவினருக்கும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று முன் தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்ப்பாணம் மாவட்டத் தில் மாத்திரம் 2 ஆயிரத்து 249 காணாமல் போனவர்கள் பற்றிய உத்தியோகபூர்வ அறிக்கைகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இது வெறுமனே காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்துக்குக் கிடைத்த தரவு மட்டுமேயாகும். இதற்கு மேலும் பதியப்படாத நபர்களும் இருக்கலாம். எனினும், ஒரு மாவட்டத்தில் மட்டும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது சாதாரணமான விடயம் அல்ல.

இங்கு இருக்கின்ற தாய்மார்கள் இன்னமும் தங்களுடைய பிள்ளைகள் எங்கோ ஓரிடத்தில் உயிரோடு இருக்கின்றார்கள், இரகசியமாக வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தீராத எதிர்பார்ப்போடு காத்துக்கொண்டிருக்கின்றார்கள்." - என்றார்.

இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்து அமைச்சர் சுட்டிக்காட்டுகையில்,

"எங்களுடைய நாட்டில் நாம் இரண்டு பேரழிவான யுத்தங்களுக்கு முகம் கொடுத்திருக்கின்றோம். 30 வருடத்துக்கு மேலாக யுத்தம் இடம்பெற்றிருந்தது. தென்னிலங்கையிலும் கூட கடந்த 1987 - 1989ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். தெற்கிலும் பெற்றோர்கள் இன்னமும் தங்கள் பிள்ளைகளைத் தேடிக்கொண்டுதான் இருக்கின்றார்கள்" -என்றார்.

"மக்களுடைய உடல் காயங்களுக்கு எம்மால் மருத்துவம் செய்ய முடியும். ஆனால், அவர்களின் ஆழமான உளக் காயங்களுக்கு மருத்துவம் செய்ய முடியாது. அதற்கு வேறு விதமான மாற்றுத் தீர்வுகளே வழங்கப்பட வேண் டும்." - என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை ஒரு முதன்மை அபிவிருத்தி மையமாகக் கொண்டு தற்போதைய அரசு செயற்பட்டு வருகின்றது என்று குறிப்பிட்ட அமைச்சர், "உண்மையான நல்லிணக்கத்துடன் இனங்களுக்கு இடையிலே சமத்துவ மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். இனிமேலும் நாம் தமிழர்கள், சிங்களவர்கள் என்று பிரிந்து சிந்திக்காது, மனிதர்களாகச் சிந்தித்து, ஒரே தாய் மக்கள் என்று கருதும் உன்னதமான நிலைமையை இந்நாட்டில் தோற்றுவிக்க வேண்டும்" - என்றும் தனது உரையில் மேலும் வலியுறுத்தினார். (அ)

# வீட்டுப் பணியாளர் தேவை அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன். 22

இலங்கையில் வயதானவர்களின் மக்கள் தொகை அதிகரித்து வருவதனாலும், கணிசமானோர் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்வதனாலும், உள்நாட்டில் வீட்டுப் பணிகளுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

வீட்டுப் பணியாளர்களைப் பாதுகாப்பதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகும் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் வீட்டுப் பணியாளர்களுக்குப் போதிய சட்ட ரீதியான பாதுகாப்பு இல்லாததன் காரணமாக, உள்ளூர் பெண்கள் வீட்டுப் பணியாளர் களாக இணைவதற்குத் தயக்கம் காட்டுவதுடன், அது அவர்களை ஊக்கமிழக்கச் செய்துள்ளது.

எனவே இவர்களின் அடிப்படைத் தொழிலாளர் உரிமைகளை உறுதிப்படுத்துவது தற்போதைய சூழலில் மிக அவசியமானதாகும்.

அத்துடன், வீட்டுப் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், இந்தத் துறையை முறைப்படுத்துவதற்கும் அவர்களுக்கென ஒரு தரப்படுத்தப்பட்ட சேவை ஒப்பந்தத்தை அறிமுகப்படுத்துவது மிகவும் முக்கியமானது என சர்வதேச தொழிலாளர் அமைப்பு வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இறம்பைக்குளம் மகளிர் ம.வி. சிறந்த பெறுபேறு

வவுனியா, ஜூன் 22

வவுனியா இறம்பைக்குளம் மகளீர் மகாவித்தியாலயம் 2025 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பதிவு செய்துள்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

வெளியான பரீட்சைப் பெறுபேறுகளின்படி 26 மாணவிகள் 9 பாடங்களிலும் "எ" சித்திகளைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் 17 மாணவிகள் 8 பாடங்களிலும், 17 மாணவிகள் ஏழு பாடங்களிலும் "எ" சித்திகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (அ)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரும் போர்வையில் இன, மத பதற்றங்களை தூண்டச் சிலர் முயற்சி!

## ரவி கருணாநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 22

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு நீதி கோரும் போர்வையில், சமூகத்தில் இன மற்றும் மத ரீதியிலான பதற்றங்களைத் தூண்டுவதற்குச் சில தரப்பினர் முற்பட்டு வருவதாகப் புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இந்தத் துரதிர்ஷ்டவசமான பேரழிவைச் சுயலாபங்களுக்காகப் பயன்படுத்தி, நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கவோ அல்லது தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் உத்தியோக பூர்வ விசாரணைகளை முடக்கவோ எவருக்கும் இடமளிக்கக் கூடாது என அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கத்தோலிக்க சமூகத்தைச் சேர்ந்த ஒருவராகத் தான் இந்த விவகாரம் குறித்துப் பேசுவதாகக் குறிப்பிட்ட அவர், இந்தத் தாக்குதல் விசாரணைச் செயல்முறைகள் மீது சில தரப்பினரும் மதத் தலைவர்களும் தேவையற்ற செல்வாக்குகளையும் அழுத்தங்களையும் பிரயோகிப்பது தமக்கு மிகுந்த மனவருத்தத்தை அளிப்பதாக கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த எந்தவொரு விசாரணையும் அரசியல் அல்லது மத நலன்களுக்குப் புறம்பாக, நீதி மற்றும் மனிதாபிமானக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே வழிநடத்தப்படவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# போதைக்கு அடிமையானோரை மீட்க நான்கு புதிய புனர்வாழ்வு மையங்கள்!

கொழும்பு, ஜூன். 22

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை மீட்டெடுத்து சமூகத்தில் மீள இணைக்கும் நோக்கில், நாடளாவிய ரீதியில் நான்கு புதிய புனர்வாழ்வு மையங்களை நிறுவுவதற்கு தேசிய அபாயக ரமான ஔடதங்கள் கட்டுப் பாட்டுச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கற்பிட்டி, குருநாகல், அக்குரஸ்ஸ மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இந்த புதிய புனர்வாழ்வு மையங்கள் அமைக்கப்படவுள்ளதாக சபையின் பணிப்பாளர் நாயகம் கே.கே.எஸ். கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

மேலும், போதைப்பொருள் விடுபடல் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில், தனியார் துறையினரால் நடத்தப்படும் 8 விசேட சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு மையங்களுக்கு புதிய உரிமங்களை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். ( அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
22.06.2026 திங்கட்கிழமை
பராபவ வருடம், ஆனி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# நீதியமைச்சரின் செம்மணி விஜயம்

யாழ்ப்பாணம் செம்மணி இலங்கையின் மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக ( இதுவரை மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 400) உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், காணாமல்போனோர் விவகார அலவலகத்தின் அதிகாரிகள் சகிதம் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவும் அந்த பகுதிக்கு செய்த விஜயம் அரசியல் ரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் முக்கியத்துவத்தை பெறுகிறது.

அமைச்சர்களின் இத்தகைய விஜயங்ளையும் நீதிக்கான வாக்குறுதிகளையும் தேசிய நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் நோக்கிய முக்கியமான நகர்வுகளாக காண்பிக்க அரசாங்கம் முயற்சிக்கின்ற போதிலும், பாதிக்கப்பட்ட சமூகங்களும் மனித உரிமை அமைப்புக்களும், இவற்றை முற்றிலும் வேறுபட்ட கோணத்திலேயே நோக்குகின்றன.

தற்போதைய அரசாங்கத்தின் பார்வையில், செம்மணிக்கு நீதியமைச்சர் நேரில் விஜயம் செய்து நிலைவரங்களை பார்வையிட்டது கடந்த காலத்தை எதிர்கொள்வதற்கான அரசியல் விருப்பத்தின் வெளிப்பாடாக காண்பிக்கப்படுகிறது. உள்நாட்டு நிபுணர்களின் வழிகாட்டலில் இடம் பெறும் அகழ்வுப் பணிகளைப் பார்வையிட காணாமல் போனோர் விவகார அலுவலக அதிகாரிகளை அழைத்து வந்ததன் மூலம் கடந்தகால அரசாங்கங்களைப் போன்று அப்பட்டமாக மறுக்கும் அல்லது திட்டமிட்டு காலத்தைக் கடத்தும் போக்கில் இருந்து விகுவதற்கான சமிக்ஞை ஒன்றை காட்ட அரசாங்கம் முயற்சிக்கிறது.

உண்மையைக் கண்டறிவதற்கான செயற்முறைகளை முறைப்படுத்துவதற்கும் பல தசாப்தங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சட்டத்துக்கு புறம்பான கொலைகள் மற்றும் ஆட்கடத்தல்களுக்கு அரசின் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கும் நீதியமைச்சரின் செம்மணி விஜயம் முக்கியமான ஒரு படி என்று அரசாங்கத்தின் அணுகுமுறையை ஆதரிப்பவர்கள் கருதுகிறார்கள்.

ஆனால், காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களும் பல தசாப்தங்களாக நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளின் கசப்பான அனுபவங்கள் காரணமாக மனிதப் புதைகுழிப் பகுதிகளுக்கு அமைச்சர்களின் வருகையையும் அவர்கள் வழங்கும் உறுதிமொழிகளையும் சந்தேகத்துடனேயே பார்க்கின்றன. இந்த நம்பிக்கை இடைவெளி அமைச்சர் நாணயக்காரவின் கடந்த வாரத்தைய விஜயத்தின்போது தெளிவாகப் பிரதிபலித்தது.

சர்வதேச கண்காணிப்பை வலியுறுத்தி பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் செம்மணியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போதிலும், அவர்களுடன் நேரடியாகப் பேசுவதற்கு முயற்சிக்காமல் அரசாங்கக் குழுவினர் கடந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

உள்நாட்டு வழிமுறைகளின் தோல்வி என்ற இதுவரையான உண்மையை ஒத்துக் கொள்ளாமல் சமகால செயன்முறைகளில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவது என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும். காணாமல் போனோர் விவகார அலுவலகம் உட்பட அடுத்தடுத்து நியமிக்கப்பட்ட உள்நாட்டு ஆணைக் குழுக்களும் அரச கட்டமைப்புக்களும் கடந்த காலங்களில் குற்றவியல் ரீதியான பொறுப்புக்கூறலை உறுதி செய்யத் தவறியதுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நம்பிக்கையை வெற்றிகொள்ளத் தவறிவிட்டன.

அமைச்சரின் வருகை என்பது அடிப்படையில் வெறுமனே ஒரு அடையாளபூர்வமான நடவடிக்கையாகவே இருக்கும். தமது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நீதிக்கான வாக்குறுதி அர்த்தமுடையதாக அமைய வேண்டுமானால், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வெறும் பார்வையிடலுடன் நின்றுவிடக்கூடாது.

பாதிக்கப்பட்ட மக்களை மையமாகக்கொண்ட விசாரணைகளை அனுமதிப்பதில் எந்தளவு தூரத்துக்கு அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்கிறது, சான்றுகளை முழுமையாகப் பாதுகாப்பதில் எந்தளவுக்கு நேர்மையாக நடந்து கொள்கிறது, குற்றவாளிகளின் தராதரங்களை பாராது அவர்களுக்கு எதிரான உண்மையான குற்றவியல் விசாரணைகளை முன்னெடுப்பதில் எந்தளவு தூரத்துக்கு அரசியல் துணிச்சலை வெளிக்காட்டுகிறது என்பதிலேயே அரசாங்கத்தின் நம்பகத்தனமை தங்கியிருக்கிறது.

# அமெரிக்கா - ஈரான் ஒப்பந்தம் எழுப்பும் தவிர்க்க இயலாத கேள்வி



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஈரான் அதிபர் மசூத் பெசெஷ் கியன் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் பெப்ரவரி 28 ஆம் திகதி ஈரானைத் தாக்குவது என்று எடுக்கப்பட்ட தவறான முடி வின் அரசியல், ராணுவ மற்றும் பொருளாதார விளைவுகளைக் குறிப்பிடுகிறது.

இதனால் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. ஈரான் மற்றும் லெபனானில் ஆயிரக்கணக்கான பேர், குறிப்பாக பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவும் ஓரளவுக்கு இஸ்ரேலும் ஒரு வியூக ரீதியான தோல்வியைச் சந்தித்துள்ளன. உலகின் வலுவான சக்தியான அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கின் வலுவான சக்தியான இஸ்ரேல் இணைந்து தன்னை முடக்க வேண்டும் அல்லது அழிக்க வேண்டும் என்கிற நோக்கில் மேற்கொண்ட கூட்டு ராணுவ நடவடிக்கை என்கிற கொடுங்கனவை ஈரானில் உள்ள ஆட்சி எதிர்கொண்டது. ஈரான் அதிலிருந்து பிழைக்க மட்டும் செய்யவில்லை, மாறாக கூடுதல் வலிமை பெற்றுள்ளது.

ஹோர்மூஸ் நீரிணையை முடக்கி, அதனுடன் உலக பொருளாதாரத்தின் முக்கிய கூறுகள், உலக எண்ணெய் மற்றும் எரிவாயு வர்த்தகத்தின் ஐந்தில் ஒரு பங்கு ஆகியவற்றை முடக்குவது என்கிற உத்தியை ஈரான் கடைபிடித்தது.

இந்த உத்தி ட்ரம்ப் பல சலுகைகளை வழங்க நிர்ப்பந்தித்தது. இந்த நகர்வு இஸ்ரேல் அரசு மற்றும் அமெரிக்காவின் ஈரான் பார்வையாளர்களை ஆத்திரமூட்டியதோடு எச்சரிக்கை கொள்ளவும் செய்துள்ளது.

லெபனானிலும் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறுகிறது. ஆனால் அது சாத்தியமில்லை என இஸ்ரேல் தெரிவிக்கிறது. லெபனானில் தான் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என இஸ்ரேல் விரும்புகிறது. இந்த விவகாரம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இடையே மேலும் ஆழமான விரிசலை ஏற்படுத்துவதோடு அமெரிக்கா உடன் எந்த விதமான ஒப்பந்தத்தையும் மறுக்கும் இரானிய கடும்போக்குவாதிகளுக்கு சாதகமாக அமையும் திறன் கொண்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, ஹோர்மூஸ் நீரிணையைத் திறப்பதற்கு மாற்றாக அமெரிக்கா ஈரானிய துறைமுகங்களின் முற்றுகையை நீக்க ஒப்புக்கொண்டது. அதனுடன் பொருளாதாரத் தடைகளை விலக்கி எண்ணெய் ஏற்றுமதி மூலம் ஈரான் பில்லியன்கணக்கான டொலர் சம்பாதிக்கவும் அனுமதிப்பதோடு வெளிநாடுகளில் முடக்கி வைக்கப்பட்டுள்ள ஈரானின் சொத்துகளை விடுவித்து மேலும் பல பில்லியன்களை ஈரான் பெறும் திரும்பப்பெறும் நடைமுறையை தொடங்கி வைக்க இருக்கிறது.

இவை அனைத்தும் அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான கடுமையான பேச்சுவார்த்தைக்கு முன்பு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போர் தொடங்கிய பெப்ரவரி 27-ஆம் திகதிக்கு முன்பான நிலைக்குச் செல்ல இந்த விலை கொடுக்க வேண்டியுள்ளது. அந்த நாளில் ஹோர்மூஸ் நீரிணை திறந்திருந்தது. அமெரிக்க மற்றும் ஈரானிய பேச்சுவார்த்தைக் குழுவினர் அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதன் மூலம் பேச்சுவார்த்தைக் குழுவினர் மீண்டும் தங்களின் பணியைத் தொடங்குவதோடு கப்பல்கள் ஹோர்மூஸ் நீரிணையைக் கடந்து செல்லவும் முடியும்.

ஜோ பைடன் அரசில் வெளியுறவு செயலாளராக இருந்த அன்ரனி பிளிங்கன் தனது எக்ஸ் பக்கத்தில் "இந்தப் போர்நிறுத்தத்தின் ஒரே "சாதனை" ஹோர்மூஸ் நீரிணையை மீண்டும் திறப்பது மட்டுமே. போர் தொடங்குவதற்கு முன்பாக இது திறந்தே இருந்தது. அவ்வாறு செய்வதற்கு நாம் ஈரானுக்குப் பணம் செலுத்த விருப்பதாகவும் தெரிகிறது."

இந்தப் போர் எதற்கானது என்கிற கேள்வி தவிர்க்க முடியாதது மட்டுமல்லாது எளிதில் விலகாத ஒன்றாக உள்ளது. இதுநாள் வரையிலான ட்ரம்பின் மோசமான வெளியுறவு கொள்கை தவறாக இது உள்ளது.

இது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவின் நீண்ட அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வருவதையும் குறிக்கலாம். ஒக்ரோபர் மாதம் அவர் தேர்தலை எதிர்கொள்ள உள்ளார், இஸ்ரேல் வரலாற்றில் மிகவும் மோசமான பாதுகாப்பு தோல்விக்கு இஸ்ரேல் வாக்காளர்கள் பதிலளிக்க உள்ளனர்.

2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதி காஸாவிலிருந்து இஸ்ரேலுக்குள் ஊடுருவ ஹமாஸ் திட்டமிட்டதை இஸ்ரேலின் ராணுவ மற்றும் உளவு அமைப்புகள் கணிக்கத் தவறிவிட்டன. நெத்தன்யாகுவின் கடுமையான ராணுவ கொள்கைகளும் மற்றும் ராஜிய நடவடிக்கைகளை நிராகரித்ததும், இஸ்ரேலின் "பாதுகாப்பு நாயகன்" என்கிற அவரது நற்பெயரை மீட்டெடுக்கும் நோக்கத்தின் ஒரு பகுதியாகவே வடிவமைக்கப்பட்டது.

ஹோர்மூஸ் நீரிணையை முடுவதால் ஏற்படும் சக்தி வாய்ந்த விளைவு பற்றி இரான் எப்போதும் அறிந்தே இருந்தது. அமெரிக்க ராணுவம், அதன் ராஜதந்திரிகள் மற்றும் உளவாளிகளும் இதனை நன்கு அறிந்திருந்தனர்.

ஆனால் எச்சரிக்கையுணர்வு கொண்ட ஈரானின் முன்னாள் அதிஉயர் தலைவர் அலி காமனெயி நீரிணையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டாம் என முடிவு செய்தார்.

ஆனால் போரின் தொடக்கத்தில் அவரையும் அவரது நெருங்கிய ஆலோசகர்களையும் இஸ்ரேல் கொன்ற பிறகு தாங்கள் ஓர் இருத்தல் சார்ந்த நெருக்கடியில் இருப்பதை உணர்ந்த அவரின் வாரிசுகள் நீரிணையை மூடத் தயங்கவில்லை.

உலகளாவிய பொருளாதாரத்தின் மீதான இறுக்கமான பிடியைக் கட்டுப்படுத்தும் விதத்தை அவர்கள் கண்டறிந்தனர். இது மிகவும் பயனுள்ள ஆயுதமானது. மத்திய கிழக்கில் பல தசாப்தங்களாக பில்லியன்கணக்கில் செலவு செய்து ஈரான் உருவாக்கிய கூட்டாளிகள் மற்றும் பினாமிகளின் வலைப்பின்னலை விடவும் மலிவானதாக இருந்தது.

2024 இன் இறுதியில் சிரியாவில் ஆசாத் ஆட்சி கவிழ்ந்த பிறகு எஞ்சியிருந்த ஈரானின் எதிர்ப்பு கூட்டணி பிழைத்திருக்கிறது. ஆனால் அவை இஸ்ரேலால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் எதிர்க்க முடியுமா என்பது முக்கியப் புள்ளியாக உள்ளது.

ஈரான் தனது அணுசக்தி திட்டத்திற்குப் பரவலாக செலவு செய்திருந்தாலும் அவை ஆயுதம் தயாரிக்கும் நோக்கில் கட்டமைப்படவில்லை எனத் தொடர்ந்து நிராகரித்து வருகிறது. இது இரானுக்கு ஒரு வாய்ப்பையும் அச்சுறுத்தலையும் வழங்கியது. ஆனால் அது ஒரு போரையும் தூண்டியது, அதில் ஆட்சிப் பிழைத்திருந்தாலும் ஈரானுக்குக் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதற்கு மாறாக நீரிணையை மூடுவது என்கிற ஈரானின் முடிவு எளிதான ஒன்றாக இருந்தது, அதற்கு விரைவான மற்றும் பலமான தாக்கமும் இருந்தது. அது அரபு எண்ணெய் வள நாடுகள் மற்றும் உலகின் பெரும்பகுதிக்கும் வலியை ஏற்படுத்தியது.

அமெரிக்க மற்றும் இஸ்ரேலின் விமானப் படைகளின் வலிமை சில தொடர் வெற்றிகளைக் கொடுத்தது. ஆனால் ஒரு ராஜிய ரீதியான தோல்வியைத் தவிர்க்க அவை போதுமானதாக

(மிகுதி நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜுன் - 22 திங்கக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 08
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.30
திதி : அஷ்டமி




**மேடம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். மகளுக்கு நல்லவரன் அமையும். புது வேலை கிடைக்கும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும். நட்பு வட்டம் விரியும்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் அன்னோனியம் பிறக்கும். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். தோற்றப் பொலிவு கூடும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த இடத்தில் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இடம் பொருள் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகும். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். பழையகடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள்.

**துலாம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள்.

**விருட்சிகம்**
சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நண்பர்களால் அனுகூலம் உண்டு. விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும்.

**தனுசு**
சோர்வு நீங்கி துடிப்புடன் செய்ய தொடங்குவீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கண்டும் காணாமல் சென்றவர்கள் வலிய வந்து பேசுவார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டி இருக்கும்.

**கும்பம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தாயார் ஆதரித்து பேசுவார்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். புது பொருள் வந்து சேரும்.

# வடமாகாணக் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு மேல் சம்பள உயர்வு இல்லை

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன். 22

வடமாகாண கூட்டுறவுப் பணியாளர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு மேலாக சம்பள உயர்வுகள் வழங்கப்படாது, வடமாகாண கூட்டுறவு பணியாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைக்காது விடின் கூட்டுறவு நிகழ்வுகளை புறக்கணிப்போம் என வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க தலைவர் ஆர்.செபஸ்தியான்பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கூட்டுறவுச் சங்கங்கள் தரப்படுத்தப்பட்டு, ஊழியர்களுக்கான சம்பளங்கள் வகுப்பட்டன. ஆனாலும் இன்று வரை சம்பளங்கள் உயர்த்தப்படவில்லை.

கூட்டுறவுச் சங்களில் ஒன்று தொடக்கம் 17 வரையில் சம்பளங்கள் வகுப்பட்டுள்ளது. ஆனாலும் நீண்ட காலமாக சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் குறைந்த சம்பளத்தை வைத்து குடும்ப வாழ்வாதரத்தை கொண்டு செல்ல முடியவில்லை. 2025,2026 மற்றும் 2027ஆம் ஆண்டுகளில் அரச , தனியார் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுகிறது.

ஆனால் கூட்டுறவுப் பணியாளர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லை. எமது சம்பளங்களை அதிகரிக்க வேண்டும். எமது சம்பளப் பாகுபாட்டை எதிர்காலத்தில் தீர்த்துக்கொண்டாலே எமது பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

வடக்கில் 8 ஆயிரத்திற்கும் அதிகமான பணியாளர்கள் உள்ளனர். இருந்தும் அரசாங்கம் எம் மீது கரிசானை காட்டவில்லை-என்றார். (அ)

# தமிழ்த்தரப்பு இந்திய அரசுடன் உறவை பலப்படுத்தவேண்டும்!

## சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை



வவுனியா, ஜூன். 22

இந்திய அரசுடன் தமிழ்க்கட்சிகள் இராஜதந்திர உறவை பலப்படுத்த வேண்டி தேவை இருக்கிறது. அதுவே எமக்கு இருக்கும் ஒரே சந்தர்ப்பம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் 36ஆவது தியாகிகள் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- போர் முடிந்து 17 வருடங்கள் ஆகியும் எமது மக்களுக்கு எந்த தீர்வும் கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைக் கூட எங்களால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

புதிய அரசியலமைப்பு விடயத்திலோ அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற விடயம் உட்பட பல விடயங்களில் இந்த அரசாங்கம் வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை.

மாறியுள்ள புதிய உலக அரசியல் ஒழுங்கானது மோசமான நிலைக்கு சென்றுள்ளதை அவதானிக்க முடியும். இஸ்ரேல்-ஈரான்,உக்ரைன்-ரஷ்ய போர்களை பார்க்கும்போது ஐக்கிய நாடுகள் சபையை தொடர்ந்து நம்பிக்கொண்டிருப்பது தமிழ் மக்களை மீண்டும் பின்நோக்கி தள்ளுகின்ற நிலையை உருவாக்கும் என்பது புலனாகின்றது.

எனவே அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்க்கட்சிகள் ஒருபுள்ளியில் ஒன்றிணைய வேண்டிய தேவைப்பாடு உள்ளது. அந்த வகையில் இந்திய அரசுடன் தமிழ்க்கட்சிகள் ராஜதந்திர உறவை பலப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அது ஒன்றே எமக்கு இருக்கக்கூடிய சந்தர்ப்பம்.

இந்த அரசு தீர்வைத் தருவார்கள் என்று வெறுமனே பாராளுமன்றுக்குள் இருந்து எதனையும் செய்ய முடியாது.

தமிழர்களின் பிரச்னைகளை இராஜதந்திர ரீதியாக புதுடில்லி அரசாங்கத்துடன் பேசுவதனூடாகவே குறைந்தபட்சமான தீர்வையாவது காணமுடியும்-என்றார். (அ)

# வட இலங்கை சங்கீத சபை நடத்திய 27 ஆவது பட்டமளிப்பு விழா யாழில்!



யாழ்ப்பாணம், ஜூன். 22

வட இலங்கை சங்கீத சபை நடத்திய 27ஆவது கலா வித்தகர் பட்டமளிப்பு விழா நேற்று முன் தினம் மாலை மருதனார் மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் நடைபெற்றது.

வட இலங்கை சங்கீத சபையின் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று விழாவை சிறப்பித்தார்.நிகழ்வின் ஆரம்பமாக மங்கல விளக்கேற்றல் இடம பெற்றதுடன், இறை வணக்க இசை நிகழ்த்தப்பட்டு விழா ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலக சந்தையில் விலை குறைந்தாலும் எரிபொருள் விலை உடனே குறையாது!

## கூறுகிறார் பிரதமர் ஹரிணி

கொழும்பு, ஜூன். 22
உலக சந்தையில் விலை குறைந்தாலும் உடனடியாக எரிபொருள் விலையைக் குறைக்க முடியாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்துள்ளபோதிலும், உள்நாட்டில் உடனடியாக விலையைக் குறைக்க முடியாது எனப் பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளார்.

தற்போது சந்தையிலுள்ள எரிபொருள் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டதுடன், அதன் சுமையின் ஒரு பகுதியை அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது.

"உண்மையான கணக்கீட்டின்படி ஒரு லீற்றர் எரிபொருள் 700 ரூபாய்க்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட வேண்டும். எனினும், அரசாங்கத்தின் நிவாரணம் காரணமாகவே அதனை 400 ரூபாய்க்கு வழங்க முடிகிறது. சாத்தியமான முதல் சந்தர்ப்பத்திலேயே விலை குறைப்பின் பலனை மக்களுக்கு வழங்குவோம்" என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவதாக எதிர்க்கட்சிகள் சுமத்தும் குற்றச்சாட்டுகளைப் பிரதமர் முற்றாக நிராகரித்துள்ளார்.

நாட்டில் சட்டம் மட்டுமே நிலைநாட்டப்படுவதாகவும், குற்றம் செய்தவர்களுக்கு எதிராகச் சட்டம் தன் கடமையைச் செய்யும்போது அதனைக் மூடிமறைக்க எதிர்க்கட்சியினர் "அரசியல் பழிவாங்கல்" என்ற ஆயுதத்தைப் பயன்படுத்துவதாகவும் அவர் சாடினார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு வேலை செய்யத் தெரியாது என எதிர்க்கட்சிகள் விமர்சிப்பது குறித்துக் கேள்வியெழுப்பப்பட்ட போது அதற்கு பதிலளித்த பிரதமர், "இவ்வளவு காலமும் "வேலை தெரிந்த" நபர்கள்த ானே ஆட்சியில் இருந்தார்கள்? அவர்கள் செய்த வேலை என்ன? நாட்டை



வங்குரோத் தாக்கினார்கள், மக்கள் பணத்தைக் கொள்ளையடித்தார்கள். அந்த மாதிரியான வேலைக ளைச் செய்ய எமக்குத் தெரி யாது என்பது உண்மை தான்" என பதிலளித்தார். (அ)

# விசாரணை வேட்டை தொடரும்!

கொழும்பு, ஜூன். 22
எத்தடை வரினும் உயிர்த்த ஞாயிறு விசாரணை நிறுத்தப்படமாட்டாது. மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் விசாரணை இடம்பெறும் என்று சட்டம், ஒழுங்கு பிரதி அமைச்சர் சுனில் வட்கல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் கூறியவை வருமாறு,

வங்குரோத்தடைந்துள்ள எதிரணி, அரசியல் நடத்துவதற்குரிய காரணிகளை தேடி அலைகின்றன. அண்மையில் கூடாரம் அமைத்து நாடகம் நடத்தப்பட்டது.

ஆனால் மக்கள் மத்தியில் இருந்து கிளம்பிய எதிர்ப்பால் எதிரணிகள் பின்வாங்கின.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற்றுவருகின்றது. இந்த விசாரணையின் பிரகாரமே சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்படும் என நாம் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தோம். இதனை நாம் நிச்சயம் செய்வோம்-என்றார்.

(அ)

# 90 வீதமான விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது உர மானியம்!

கொழும்பு, ஜூன். 22
நடப்பு சிறுபோகப் பயிர்ச் செய்கையில் ஈடுபட் டுள்ள 90 வீதமான விவசாயி களுக்குத் தேவையான உர மானியங்கள் வெற்றிக ரமாக வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தித் திணைக் களம் அறிவித்துள்ளது.

இம்முறை அரசாங்கத்தினால் வழங்கப்படும் உர மானியத் தொகை 5000 ரூபாயினால் அதிகரிக்கப் பட்டுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தம்மிக ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேயருக்காக வழங்கப்பட்டு வந்த உர மானியம் 30ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.(அ)

# முன்னைய அரசுகள் போலவே அநுர அரசும் நாடகமாடுகிறது!

## சாடுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன். 22
முன்னாள் அரசாங்கங்களைப் போலவே தற்போதைய அரசாங்கமும் தனது பழைய பழகிய பாணியில் நாடகங்களை அரங்கேற்றி, மக்களின் மனங்களை மாற்றுவதற்கு முயற்சி செய்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி குற்றம் சாட்டி யுள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்களைப் போலவே இந்த அரசாங்கமும் பழையபடி நாடகங்களை காட்டி, மக்களின் சிந்தனையை திசைதிருப்ப தயாராகி வருகிறது.

இருப்பினும், மக்களுக்கு பசி ஏற்படும் போதும், மின்சாரம் இன்றி இருளில் வாழும் நிலை வரும் போதும், வாகனங்களுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் போதும் மக்கள் வீதிக்கு இறங்குவார்கள்.

அவ்வாறு மக்கள் வீதிக்கு இறங்கி போராடும் போது, இந்த அரசாங்கத்திற்கு அவர்கள் தகுந்த மற்றும் சரியான பதிலை எதிர்வரும் காலத்தில் வழங்குவார்கள்-என்றார்.

(அ)

# எரிபொருள் விற்பனையின் மூலம் இலாபம் ஈட்டும் நோக்கம் இல்லை!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன். 22
உலகளாவிய எரிபொருள் விலைகள் தற்போதைய அளவில் நீடித்தால், அதன் பலன்களை ஒகஸ்ட் அல்லது செப்ரெம்பர் மாதத்துக்குள் பொதுமக்களுக்கு வழங்க முடியும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விற்பனை மூலம் இலாபம் ஈட்டும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

தற்போதைய நிலைமை குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர், பொதுமக்களின் நலனுக்காக ஒரு லீற்றர் டீசலுக்கு சுமார் ரூ. 100 மற்றும் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு சுமார் ரூ. 20 மானியம் ஏற்கனவே அரசாங்கம் வழங்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

வழக்கமான சந்தையிலிருந்து பொருள்களை வாங்குவதைப் போல, எரிபொருள் கொள்முதலை உடனடியாக மேற்கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட் டினார்.

மாறாக, முறையான கேள்வி கோரல் நடைமுறைகள் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட விலையில் எரிபொருளைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறில் கல்முனை கல்வி வலயம் முன்னிலை

## 129 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை

அம்பாறை, ஜுன். 22

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் கிழக்கு மாகாண வலய வாரியான பெறுபேறு அறிக்கை வெளியாகியுள்ள நிலையில், அம்பாறை மாவட்டத்தின் கல்முனை கல்வி வலயம் பல்வேறு குறியீடுகளில் முன்னிலை வகித்து கல்வித்துறையில் புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில், கல்முனை கல்வி வலயம் 84.5 வீத சித்தி வீதத்துடன் முன்னணி வலயங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. மேலும் கணிதம் மற்றும் தமிழ் ஆகிய இரு பாடங்களுடனும் 6 பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்களின் வீதம் 75.1 வீதமாக பதிவாகியுள்ளது.

குறிப்பாக, 129 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தின் அனைத்து கல்வி வலயங்களிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். இதேவேளை மட்டக்களப்பு மத்திய கல்வி வலயம் 124 மாணவர்களுடனும், மட்டக்களப்பு கல்வி வலயம் 122 மாணவர்களுடனும் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று கல்வி வலயமும் சிறப்பான பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளது. அக்கரைப்பற்று வலயத்தில் 85.4 வீத சித்தி வீதமும், 55 மாணவர்கள் 9 ஏ சித்திகளும் பதிவாகியுள்ளன.

கிழக்கு மாகாண அளவில் மொத்தமாக 25,941 மாணவர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில், 25,370 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

அவர்களில் 18,881 மாணவர்கள் கணிதம் அல்லது தமிழுடன் சித்தி பெற்றுள்ளது டன், மாகாணத்தின் மொத்த சித்தி வீதம் 74.42 வீதமாகக் காணப்படுகிறது.

மாவட்ட அடிப்படையில் பார்க்கும்போது, அம்பாறை மாவட்டம் 77.79 வீத சித்தி வீதத்துடன் முதலிடத்திலும், மட்டக்களப்பு மாவட்டம் 75.78 வீத சித்தி வீதத்துடன் இரண்டாம் இடத்திலும், திருகோணமலை மாவட்டம் 66.59 வீத சித்தி வீதத்துடன் மூன்றாம் இடத்திலும் உள்ளன. (அ)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

# மாவட்ட, பிரதேச செயலக மட்டங்களில் விசேட குழு!

கொழும்பு, ஜுன். 22

நாடு முழுவதும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்துவதற்காக, மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் செயற்படக்கூடிய விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் குழுக்கள் பெயரளவில் மாத்திரம் இயங்காமல், நுளம்புகள் பெருகும் இடங்களை அழிப்பதற்கான செயற்திட்டங்களை நேரடியாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் என அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுக்கள் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் அரச, தனியார் நிறுவன வளாகங்களை உன்னிப்பாகக் கண்காணித்து, நுளம்புகள் பெருகும் இடங்களை அழிப்பதற்கான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

மாவட்டங்கள் முழுவதும் டெங்கு ஒழிப்பு முயற்சிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக, உள்ளூர் அதிகாரிகளுடன் இந்தக் குழுக்கள் நெருக்கமாக இணைந்து செயற்படவுள்ளன.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்திற்கொண்டு, பொது மக்கள் மற்றும் நிறுவனங்கள் வாராந்தம் 30 முதல் 45 நிமிடங்களை தங்களின் வாழும் சூழலைத் தூய்மைப்படுத்துவதற்காக ஒதுக்கவேண்டும் என அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## போக்குவரத்து விதிகளை மீறியோரின் 33 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றல்!



அம்பாறை, ஜுன். 22

வீதி பொது போக்குவரத்து சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பலரது மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கைக்காக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நகரப்பகுதி உட்பட புறநகர் பகுதிகளில் நேற்று முன்தினம் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஆவணம் காப்புறுதி எதுவும் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்துவது, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது , ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது , அதிவேகமாக செல்வது ,மிக ஒலி எழுப்பிய மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட பொது போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் 33 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டதுடன் அவற்றை ஓட்டிய சந்தேக நபர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அத்துடன் இவ் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கையுடன் கூடிய அறிவுரைகள் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வழங்கியதுடன் சட்ட நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் சோதனை செய்யப்பட்டு வருகின்றன. (அ)

# நிந்தவூர் கடற்கரையில் கடல் அரிப்பு தீவிரம்: மீனவர்களும் பொதுமக்களும் பெரும் அவதி!

அம்பாறை, ஜுன். 22

நிந்தவூர் கடற்கரைப் பகுதியில், குறிப்பாக பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாசல் அண்மித்த பகுதியில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான கடல் அலையின் தாக்கம் மற்றும் கடல் அரிப்பு காரணமாக மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடல் அரிப்பு தீவிரமடைந்துள்ளதால், கரைவலை மீனவர்கள் தங்களது வழக்கமான மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெரும் சவால்களை சந்தித்து வருகின்றனர். கடற்கரைப் பகுதியில் வலைகளை இழுப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாத காரணத்தால், அவர்கள் தற்போது வீதியோரப் பகுதிகளில் வலை இழுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக கடல் அலையின் தாக்கம் அதிகரித்துள்ளதன் காரணமாக, கரை வலை மீனவர்கள் தங்களது தோணிகளை பயன்படுத்தி சுதந்திரமாக கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். மேலும், வலைகளை கரைக்கு இழுத் துவர முடியாத நிலை அவர்களின் தொழிலையும் வருமானத்தையும் பாதித்துள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

மீனவர்களின் இந்த நடவடிக்கையால், அப்பகுதி வீதியை பயன்படுத்தும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, அன்றாடம் பயணிக்கும் வாகன ஓட்டிகள், மீன் குளிரூட்டும் லொறிகள், தொழிலாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்டோர் வீதியோரத்தில் இழுக்கப்படும் வலைகளால் போக்குவரத்து நெரிசல் மற்றும் இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடல் அரிப்பைக் கட்டுப்படுத்தும் வகையில் நிரந்தர தீர்வொன்றை விரைவாக நடைமுறைப்படுத்து வதற்கு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## கும்மிப்பாடல் வெளியீட்டு விழா



காரைதீவு, ஜுன் .22

பெரியநீலாவணை அருள் மிகு ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய கும்மிப்பாடல் வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை ஆலய முன்றலில் ஆலய தலைவர் எஸ். குபேரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கும்மிப்பாடலு க்கான வரிகள் மற்றும் பாடலை கோபாலகிருஷ்ணன் கிருஸ்ணசௌறி பாடியுள்ளார். இவரோடு பாடகி கானக்குயில் ருக் மாங்கதன் ரிஷார்த்தகி பாடியுள்ளார்.

இக் கும்மிப்பாடலு ககான இசை மற்றும் ஒளிப்பதிவு ஜெ. சங் கர்ஜன் செய்துள்ளார்.

இந்நி கழ்வில் ஆசிரிய ஆலோசகர் எம்.லக்குணம், தமிழகரன் சனா, பூசகர் சிவ ரெத்தினம், சிவசிறி விதுசன் சர்மா உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# சுங்கத் திணைக்களத்தில் இனிமேல் காகித பயன்பாட்டுக்கு முற்றுப்புள்ளி!

கொழும்பு, ஜுன். 22

இலங்கை சுங்கத்தின் "காகிதமற்ற ஆவணச் செய லாக்க" வேலைத்திட்டத்தை விரைவுபடுத்தும் நோக்கில், ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதில் இலங்கை வர்த்தக சபை, சுங்க அனுமதி முகவர் அமைப்புகள், இலங்கை சுங்க அதிகாரிகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் சுங்க அனுமதி முகவர்கள் தங்களது சுங்கப் பதிவுகள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை காகிதப் பயன்பாடின்றி, மின்னணு முறைமையூடாகச் சமர்ப்பிப்பதற்கு வழிநடத்துவதும், நோக்கமாகும்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க, சுங்கப் பதிவுகள் மற்றும் ஆவணங்களை இணையவழியில் ஏற்றுக்கொள்வதற்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப வசதிகளையும் இலங்கை சுங்கம் தற்போது பூர்த்தி செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

எனவே, வர்த்தக சமூகம் இனிமேலும் பாரம்பரிய அச்சிடப்பட்ட ஆவணங்களைப் பயன்படுத்தி சுங்கத்திற்கு ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அனைத்து சுங்கப் பதிவுகளும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களும் காகிதமற்ற மின்னணு முறைமையூடாக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற தேவையை ஜனாதிபதி செயலாளர் இங்கு வலியுறுத்தினார்.

இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குத் தங்களது முழுமையான ஆதரவை வழங்குவதாகவும், ஜனாதிபதி அலுவலகத்துடன் இணைந்து தமது உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு வேலைத் திட்டங்களைச் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர். (அ)

# எரிபொருள் கியூ.ஆர். நீக்கம் இறுதி முடிவு இன்னுமில்லை!

கொழும்பு, ஜுன். 22

எரிபொருள் விநியோகத்திற்காக தற்பொழுது நடைமுறையிலுள்ள கியூ.ஆர். குறியீட்டு முறையை முழுமையாக நீக்குவது தொடர்பாக அரசாங்கமோ அல்லது கூட்டுத்தாபனமோ இதுவரை எந்தவொரு இறுதி முடிவையும் எடுக்கவில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஆலோசனைகளோ அல்லது கலந்துரையாடல்களோ இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். இதேவேளை, உலக சந்தையில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை முதல் தொடர்ச்சியாக சரிவைச் சந்தித்து வந்த மசகு எண்ணெய் விலைகள், நேற்றைய தினம் மீண்டும் சற்றே அதிகரிப்பைக் காட்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## செம்மணி மனித புதைகுழியில்...

துடன், அவற் றில் 377 என்புக்கூடுகள் இது வரை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கியூ.ஆர்...

நோக்குடனேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் டி.ஏ. ராஜகருண குறிப்பிட்டார்.

அத்துடன், உலக சந்தையில் எரிபொருள் விலைகள் தொடர்ந்து ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அநுர ஜனாதிபதியானமையால்...

வழங்கும் உன்னத தலைவராக விளங்குகிறார். இதனை எண்ணி நாம் அனைவரும் பெருமிதமும் மகிழ்ச்சியும் கொள்ள வேண்டும்.

நாம் இப்போது ஒரு வரலாற்று மாற்றத்தின் தருணத்தில் இருக்கிறோம். வரலாறு என்பது தனிநபர்களின் உரிமையாகவோ அல்லது அவர்களால் மட்டுமே உருவாக்கப்படுவதோ அல்ல. நாட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடித்தவர்கள் இப்போது அதிகாரத்தை இழந்து புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மக்களால் துடைத்தெறியப்பட்டு விட்டார்கள்.

அவர்களுக்கு இப்போது சலுகைகள் இல்லை, நண்பர்களை மகிழ்விக்க முடியாது, திருடவும் முடியாது. அதனால்தான் அவர்களுக்கு நம் மீது கோபமும் வெறுப்பும் உள்ளது.

கடந்த காலத்தில் அமைச்சரவையில் எந்தப் பொறுப்பும் இல்லாத அமைச்சர்கள் இருந்தார்கள். அரசு அதிகாரிகளை மரத்தில் கட்டிவைத்து, கப்பம் கோரிய அமைச்சரவை அமைச்சர்கள் இருந்தார்கள். ஊழல்வாதிகளால் இப்போதுள்ள நமது பேராசிரியர்களையும் அறிவுஜீவிகளையும் சகித்துக்கொள்ள முடியவில்லை. சிறைக்குச் செல்லவிருக்கும் அவர்களுக்கு இவற்றைத் தாங்கிக்கொள்ள முடியாமல், எம் மீது சேறு பூசுகிறார்கள், அவதூறு பரப்புகிறார்கள், பொய் சொல்கிறார்கள்.

இது ஒரு மாற்றத்திற்கான யுகம். அன்று "மஹாபொல" புலமைப்பரிசிலை 500 ரூபாவால் அதிகரிக்குமாறு கேட்டு வீதியில் இறங்கியபோது, அதைவிட அதிக பணம் செலவழித்து எம்மீது கண்ணீர்ப்புகை வீசினார்கள். அன்று தண்ணீர் இல்லாமல் நாம் வீதியில் இறங்கிப் போராடினோம். ஆனால் இன்று ஆர்ப்பாட்டங்கள் இல்லை. மஹாபொல புலமைப்பரிசில் தொகையை இரண்டு முறை உயர்த்தி, இப்போது 10,000 ரூபாவாக வழங்கியுள்ளோம். நாம் ஆட்சியில் இருப்பதால் ஆர்ப்பாட்டங்கள் இல்லை என்பதல்ல, நாம் மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவுங்கள். நாட்டின் பொருளாதாரத்தில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், உங்களுடன் சேர்ந்து நாங்களும் போராட வீதிக்கு வருவோம். மஹாபொல மற்றும் விடுதிப் பிரச்சினைகள் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் நினைப்பதற்கு முன்பே அவற்றை நாம் செய்து முடிப்போம். நாட்டின் பிரச்னையை உங்களுடைய சொந்தப் பிரச்னையாகப் பாருங்கள். போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை ஒழிக்க வேண்டும். சட்டம் தன் கடமையைச் செய்யும். தனிப்பட்ட ரீதியில் எவருக்கும் யாருடனும் எந்தப் கொடுக்கல் வாங்கல்களும் இல்லை.

இந்த நாட்களில் நாடு முழுவதும் டெங்கு நோய் பரவி வருகிறது, அதற்காக நாம் களத்தில் இறங்கி வேலை செய்கிறோம், போராடுகிறோம். நமது நாட்டு எதிர்க்கட்சியின் பலவீனம் மற்றும் அவர்களின் சதித்திட்டங்களின் ஆயுள் எவ்வளவு காலம் என்பதை நீங்களும் கற்றுக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

## நீதியரசர்கள் வெற்றிடம்...

இந்தச் சூழ்நிலையில், எதிர்வரும் பாராளுமன்றக் கூட்டத்தொடர் வாரத்தில் அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்க்கமான அரசியல் நகர்வை மேற்கொள்வது குறித்து எதிர்க் கட்சிகளின் கவனம் திரும்பியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, அரசாங்கத்துக்கு எதிராக எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கிடையில் விசேட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் பலம் போதியதாக இல்லாததால், ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணையைக் கொண்டு வருவது கடினம் என்பதே எதிர்க் கட்சிகள் அனைத்தினதும் கருத்தாக உள்ளது.

இதன் காரணமாக, அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வர தற்போது பொதுவான இணக்கப்பாடு ஏற்பட்டு வருவதாக எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் பாராளுமன்ற வாரத்தில் இது குறித்த இறுதி முடிவு எடுக்கப்பட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தயாரித்தல் மற்றும் அதனைச் சமர்ப்பித்தல் தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# இலங்கைத் தூதரகம் முன்பாக லண்டன் தமிழர்கள் போராட்டம்

லண்டன், ஜூன். 22

பிரித்தானியாவின் லண்டன் நகரில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு முன்பாக, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் நீதியை வலியுறுத்தியும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் கடுமையான பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றை உடனடியாக நீக்க வலியுறுத்தியும் நேற்று அமைதிப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

"தமிழீழ சுயநிர்ணய அமைப்பு", "சர்வதேச நீதிக்கான தமிழீழ மக்கள் சங்கம்" மற்றும் பல தமிழ் தேசிய அமைப்புகள் இணைந்து நேற்று மதியம் 1.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை இப்போராட்டத்தை ஒருங்கிணைத்து நடத்தியிருந்தது.

போராட்டத்தில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான தமிழர்கள், தமிழீழத் தேசியக் கொடிகளையும், கோரிக்கை பதாகைகளையும் ஏந்தியவாறு, "நீதியும் சுயநிர்ணயமும் தமிழீழத்திற்கே!" என்ற ஒற்றை முழக்கத்தை முன்வைத்து தங்களது கண்டனங்களையும் கோரிக்கைகளையும் பதிவு செய்தனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழீழப் பகுதிகளில் சர்வதேச அமைப்புகளின் கண்காணிப்புடன் கூடிய பொது வாக்கெடுப்பு உடனடியாக நடத்தப்பட வேண்டும், இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் கடுமையான பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றை உடனடியாக நீக்க வேண்டும், தமிழர்களின் பேச்சுரிமை, கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், நினைவேந்தல் உரிமை மற்றும் கலாச்சார உரிமைகள் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும், ஈழத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் தொடர்ச்சியான அரசியல் ஒடுக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பொறுப்புக்கூறலும், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய நீதியும் கிடைக்கப் பெற வேண்டும் போன்று ஐந்து பிரதான கோரிக்கைகள் சர்வதேச சமூகத்திடம் முன்வைக்கப்பட்டன. (அ)




## தரமற்ற நிலக்கரியுடன்...

குறித்த கப்பலில் கொண்டுவரப்பட்ட நிலக்கரிக்கான தரச்சான்றிதழ் தேவையான தரநிலைகளை பூர்த்தி செய்யவில்லை என உறுதி செய்யப்பட்ட பின்னரே அந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

திருப்பி அனுப்பப்பட்ட கப்பலுக்குப் பதிலாக புதிய நிலக்கரி கப்பல் ஒன்றை இலங்கைக்கு அனுப்புவதாக சம்பந்தப்பட்ட நிறுவனம் உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எனினும் கடல் சீற்றம் காரணமாக மாற்று கப்பல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 22 நிலக்கரி கப்பல்களில் இருந்த சரக்குகள் வெற்றிகரமாக இறக்கப்பட்டுள்ளதாகவும், 23ஆவது கப்பலில் உள்ள நிலக்கரியும் நாளை இறக்கப்படலாம் எனவும் செயலாளர் குறிப்பிட்டார்.

மேலும், எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரை தடையின்றி மின்சார உற்பத்தியை முன்னெடுக்க தேவையான குறைந்தபட்ச நிலக்கரி கையிருப்பு நாட்டில் இருப்பதாகவும், அதுவரை அவசர மின் கொள்முதல் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## எரிபொருள் விலை...

அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவம் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளை கடுமையாக விமர்சித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் இறக்குமதி செலவு, வரிகள், போக்குவரத்து கட்டணங்கள் மற்றும் இலாப வீதங்கள் உள்ளிட்ட இறுதி சில்லறை விலை நிர்ணயத்தின் அனைத்து கூறுகளையும் அரசாங்கம் வெளியிடவேண்டும்.

அரசாங்கம் மானியம் வழங்குவதாகக் கூறினால், அதனை வெறும் கோஷங்களாகக் கூறாமல் கணக்குகளுடன் ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும்.

உலக சந்தை நிலவரத்துக்கு ஏற்ப பிராந்திய நாடுகள் எரிபொருள் விலைகளைக் குறைத்து வரும் வேளையில், இலங்கையில் மாதந்தோறும் விலைகள் உயர்த்தப்படுவது அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தையே காட்டுகிறது.

தேர்தல் வாக்குறுதிகளை மீறுவதில் இந்த அரசாங்கம் சாதனை படைத்துள்ளது. வேலைவாய்ப்பு கோரும் பட்டதாரிகள் மற்றும் முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்குவதற்குப் பதிலாக அரசாங்கம் அடக்குமுறையைப் பயன்படுத்துகிறது.

உணவு இறக்குமதிக்காக அந்நியச் செலாவணியை வீணடிப்பதை நிறுத்தி, உர மானியம் வழங்கி உள்நாட்டு விவசாயிகளையும் மீனவர்களையும் பலப்படுத்த வேண்டும். அத்துடன், நாடு முழுவதும் அதிகரித்து வரும் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கமும் உள்ளூராட்சி அமைப்புகளும் தவறிவிட்டன.

அரசாங்கம் தனது தோல்விகளின் சுமையை மக்கள் மீது சுமத்துவதை நிறுத்திவிட்டு, பொருளாதார நிவாரணம், உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொதுச் சுகாதார மேம்பாடு ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்-என்றார். (அ)

## பருவநிலை மாற்றத்தின்...

புயல்களாலும், 337 மில்லியன் குழந்தைகள் ஆற்று வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆப்பிரிக்காவில் மட்டும் 1 பில்லியன் குழந்தைகள் மலேரியா ஆபத்தை எதிர்கொள்கின்றனர்.

கடந்த 2024ஆம் ஆண்டில் மட்டும், பருவநிலை விபரீதங்களால் 85 நாடுகளில் 242 மில்லியன் குழந்தைகளின் கல்வி தடைப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் உலகளாவிய வானிலையை மாற்றி அமைக்கும் "சுப்பர் எல் நினோ" தாக்கம் வரவிருக்கும் மாதங்களில் உணவு உற்பத்தியை அச்சுறுத்தக்கூடும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இருப்பினும், கடந்த ஆண்டுகளில் உலகளவில் அரிசி மற்றும் இதர தானியங்கள் சாதனை அளவில் அறுவடை செய்யப்பட்டு சேமிப்பில் உள்ளதால், உணவுப் பற்றாக்குறை ஆபத்து சற்றுக் குறைந்துள்ளதாக ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

## புதிய வரியால் தேங்காய்...

இதனால், மதிப்புக்கூட்டப்பட்ட ஏற்றுமதிக்காக பயன்படுத்தப்படும் உள்ளூர் தேங்காய்கள் உள்நாட்டு எண்ணெய் உற்பத்திக்குத் திருப்பப்படலாம் என்றும், அதன் விளைவாக பண்ணை விலைகள் குறையவும், ஏற்றுமதி ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்படவும் வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி முழுமையாக தடைப்பட்டால் அரசாங்கத்திற்கு எதிர்பார்க்கப்படும் வரி வருவாய் கிடைக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வரி 2026 ஆம் ஆண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் ஏற்றுமதி வருவாயையும் அரசாங்க வருவாயையும் குறைத்து, தொழில்துறையை கடுமையான அழுத்தத்திற்குள் தள்ளக்கூடும் என ஹர்ஷ டி சில்வா எச்சரித்துள்ளார்.

இந்த வரிக் கொள்கையின் தாக்கங்களை அரசாங்கம் கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## "பொதுமன்னிப்பு கிடைத்தால்...

விதிக்கப்பட்டுள்ள சோமரத்ன ராஜபக்ஷ தொடர்பில், அவரது மனைவி எஸ்.சி. விஜேவிக்ரம கடந்த ஆண்டு ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில், கிருஷாந்தி கொலை மற்றும் செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் தன்னிடம் உள்ள தகவல்களை மீண்டும் விசாரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் கடந்த ஆண்டு ஒகஸ்ட் 8ஆம் திகதி மற்றும் இவ்வாண்டு ஜனவரி 9ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் சோமரத்ன ராஜபக்ஷவை சந்தித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் ஒன்றையும் அவர் அதிகாரிகளிடம் கையளித்திருந்ததுடன், செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் தொடர்பில் ஏற்கனவே பல தகவல்களை வழங்கியிருந்த போதிலும், இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். மேலும், சுயாதீன விசாரணைக் குழுவொன்றை நியமித்து முழுமையான விசாரணை நடத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், செம்மணி மனிதப்புதைகுழி அமைந்துள்ள பகுதியை அண்மையில் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, "நான் சோமரத்ன ராஜபக்ஷவை நேரில் சந்திக்கவில்லை. ஆனால் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் அவரைச் சந்தித்துள்ளார். அப்போது தனக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கினால் உண்மைகளை வெளிப்படுத்துவதாக அவர் கூறியிருக்கிறார். உண்மையைச் சொல்ல விரும்புபவர் இவ்வாறு நிபந்தனை விதிப்பாரா?" என கேள்வி எழுப்பினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

## டீசல் விலை குறைந்தாலும் பஸ் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, ஜூன்.22

டீசல் விலை குறைக்கப்பட்டாலும் எதிர்வரும் 6 மாதங்களுக்கு பஸ் கட்டணத்தில் எவ்வித திருத்தங்களையும் மேற்கொள்ளப் போவதில்லை என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தை எதிர்வரும் ஜூலை 3 ஆம் திகதி முன்னெடுப்பது தொடர்பில் ஆலோசிக்கப்படுகின்றது.

எரிபொருள் விலைச் சூத்திரம் மாத இறுதியில் முன்னெடுப்பதால் அதன் அடிப்படையிலேயே பஸ் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனினும் ஜூலை மாதத்தில் பஸ் கட்டணத்தில் திருத்தம் செய்யப்பட்டால் அதன் பின்னரோ அல்லது அதற்கு முன்னரோ டீசல் விலை குறைக்கப்படுமாயினும் 6 மாதங்கள் வரை எவ்வித கட்டண திருத்தத்தையும் மேற்கொள்ளப் போவதில்லை.

ஜூன் மாதம் 1 ஆம் திகதி முதல் இறுதி வரையான காலப்பகுதி வரையில் தனியார் பஸ் போக்குவரத்துத் துறை நாளொன்றுக்கு 25 ரூபாய் வீதம் 60 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் செய்துக் கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் டீசல் விலை குறையுமானால் பஸ் கட்டணம் குறைக்கப்பட வேண்டும் என எவ்வித உள்ளடக்கமும் இல்லை. இதுவரை புரிந்துணர்வின் அடிப்படையிலேயே அதனை நாம் செய்து வந்தோம். இனி அவ்வாறு செய்யப் போவதில்லை. அது குறித்து எம் மீது வழக்கு தொடுக்கவும் முடியும்-என்றார். (அ)

# இனவாதத்துக்கு இடமளிக்காத கல்வி முறை உருவாகவேண்டும்



### அமைச்சர் கே.டி.லால்காந்த கோரிக்கை

கொழும்பு, ஜூன்.22

நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்குவதற்கு எந்தவிதத்திலும் இடமளிக்கப்படமாட்டாது என விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தின் அகுரணை பகுதியில் இடம்பெற்ற மீசான் இன்ஸ்டிட்யூட் கல்வி நிறுவனத்தில் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் இனவாதத்தை திட்டமிட்டு பரப்பிய பல்வேறு அமைப்புகள் சமூகத்தில் செயற்பட்டதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போதைய அரசாங்கம் அவ்வாறான சக்திகளின் செல்வாக்கை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக கூறினார்.

இனவாதத்தின் காரணமாக அநீதிகளை எதிர்கொண்டவர்களில் மருத்துவர் ஷாபி ஷிஹாப்தீன் ஒருவரென குறிப்பிட்ட அமைச்சர், நீதியும் நியாயமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக தெரிவித்தார்.

அனைத்து இனங்களுக்கும் மதங்களுக்கும் உரிய மரியாதை வழங்கப்படவேண்டியது அவசியம் என வலியுறுத்திய அவர், இனவாதத்திற்கு இடமளிக்காத கல்வி முறையை உருவாக்குவதில் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என தெரிவித்தார்.

மாணவர்கள் கல்வியறிவைப் பெறுவதோடு மட்டுமல்லாமல் சமூகப் பொறுப்புணர்வும் குடிமைப் பண்புகளும் கொண்டவர்களாக உருவாகவேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் எந்த மதத்திற்கும் எதிரானதல்ல என்பதை நடைமுறையில் நிரூபித்துள்ளதாக தெரிவித்த அவர், அனைத்து மதங்களும் சுதந்திரமாக தமது வழிபாடுகளையும் கலாசார மரபுகளையும் பின்பற்றுவதற்கு தேவையான சூழல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (அ)

## அமீனுக்கு கனடாவில் பாராட்டு விழா

அம்பாறை, ஜூன். 22

இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும் சமூக ஆர்வலருமான என். எம். அமீனைக் கௌரவிக்கும் வகையிலான விசேட சந்திப்பும் பாராட்டு விழாவும் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறவுள்ளது.

“சிறீலங்கா முஸ்லிம் கம்யூனிட்டி கனடா” அமைப்பினால் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கனடாவின் ஸ்கார்பரோவில் அமைந்துள்ள அமானா மாநாட்டு மண்டபத்தில் அன்றைய தினம் பி.ப. 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஊடகத்துறை மற்றும் சமூக மேம்பாட்டிற்காகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்துச் சேவையாற்றிய என். எம். அமீனின் பணிகளைக் கௌரவிக்கும் வகையிலும், அவருடன்



கனேடிய வாழ் மக்கள் கலந்துரையாடும் வகையிலும் இச்சந்திப்பு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. (அ)

# அடிப்படை உரிமைகளில் இலவச கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட மேலும் பல உரிமைகளை சேர்க்கவேண்டும்!

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன். 22

அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் இலவச கல்வி, இலவச சுகாதாரம், வாழ்வாதார உரிமை உள்ளிட்ட பல்வேறு

சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் இணைக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் “மூச்சு” செயற்திட்டத்தின் கீழ், கண்டி தேசிய வைத்தியசாலைக்கு 48 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹீமோ டயாலிசிஸ் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டின் அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பாக விரிவான கருத்துகளை வெளியிட்டார்.

அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் தற்போது உள்ள அடிப்படை உரிமைகளுடன், இலவச கல்வி, இலவச சுகாதாரம், வாழ்வாதாரத்திற்கான உரிமை, கைத்தொழிலுக்கான உரிமை மற்றும் பெண்கள், சிறுவர்களின் உரிமைகள் ஆகியனவும் அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானங்களை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே எடுத்துள்ளதாகவும், தமது தேர்தல் கொள்கை அறிக்கைகளிலும் இவ்விடயங்கள் தெளிவாக இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசியலமைப்பில் குடிமக்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ள போதிலும், சுகாதாரம், கல்வி, விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற முக்கிய துறைகள் அடிப்படை உரிமைகளின் கீழ் சேர்க்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயங்கள் அரசியலமைப்பின் ஆறாம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், அவற்றை குடிமக்கள் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, சமூக நீதியையும் மக்களின் அடிப்படை தேவைகளையும் உறுதிப்படுத்தும் வகையில், இவ்வுரிமைகள் அனைத்தும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் இணைக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்தியுள்ளார். (அ)

## 25 திறன் மேம்பாட்டு பகல் பராமரிப்பு மையங்கள் நாடு முழுவதும் அமையும்!

### அமைச்சர் உபாலி பன்னில அறிவிப்பு

கொழும்பு, ஜூன்.22

நாடு முழுவதும் 25 திறன் அபிவிருத்திப் பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதுடன், இதன்கீழ் 2026 ஆம் ஆண்டில் 10 நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் உபாலி பன்னில தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளி சிறார்களுக்கான குழந்தை வழிகாட்டல் மற்றும் முன்தொழில் திறன் மேம்பாட்டு மையங்களுக்காக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயல்படும் சமூக சேவைகள் திணைக்களம், தற்போது மாற்றுத்திறனாளி சிறார்களுக்காக இரண்டு குழந்தை வழிகாட்டல் மற்றும் முன்தொழில் திறன் மேம்பாட்டு மையங்களையும், ஒரு முன்தொழில் திறன் மேம்பாட்டு நிலையத்தையும் நடத்தி வருகிறது.

“ஒன்றிணைந்து யாரையும் பின்தள்ளாமல்” என்ற அரசின் கொள்கையின் கீழ், எதிர்காலத்தில் இதே சேவைகளை வழங்கும் 25 திறன் மேம்பாட்டு பகல் பராமரிப்பு மையங்களை நாடு முழுவதும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக 2026ஆம் ஆண்டில் 10 புதிய மையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த மையங்களுக்காக முன்பள்ளி ஆசிரியர்கள், உதவி பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோரைக் நிரந்தர மற்றும் தினக்கூலி அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, தற்போது இயங்கி வரும் குழந்தை வழிகாட்டல் மற்றும் முன்தொழில் திறன் மேம்பாட்டு மையங்களுக்கான முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் குறியீட்டு நிகழ்வு, அமைச்சர் உபாலி பன்னில தலைமையில் சமூக சேவைகள் திணைக்கள வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க மற்றும் சமூக சேவைகள் பணிப்பாளர் தர்ஷனி கருணாரத்ன உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

## சாதாரண தர உயர்தர பரீட்சையை ஒத்திவைக்கும் அவசியம் இல்லை!

### கல்வி, உயர் கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன்.22

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையை மேலும் பிற்போடுமாறு பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விளக்கம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவனம் வெளியிட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டலின்படி, உயர்தரப் பாடத்திட்டங்களை முழுமையாக நிறைவு செய்ய 300 பாடசாலை நாள்கள் போதுமானதாகும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, 2026 உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், ஒகஸ்ட் 7 ஆம் திகதி வரை மொத்தம் 343 பாடசாலை நாட்கள் கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது தடவையாக பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு, கடந்த பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து இம்முறை பரீட்சை நடைபெறும் நாள் வரை நான்கு மாதங்களும் பத்து நாள்களும் இடைவெளி உள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராக போதுமான கால அவகாசம் கிடைத்துள்ளதால், உயர்தரப் பரீட்சை நடைபெறும் கால அட்டவணையில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையில்லை எனக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.